**OS.NO: 128/2025**

**PW 1 : தயாளன் த/பெ.சுப்ரமணி**

நாள் : 17.02.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

எனக்கு பிரதிவாதியை 20 ஆண்டுகளாக தெரியும். அவரும் நானும் குடும்ப ரீதியாக 20 ஆண்டுகள் நண்பர்கள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு போடுவதற்கு முன்பான பிரதிவாதி என்னிடம் பணம் பரிவர்தனை வைத்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி ஒரு ஆசிரியர் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது மனைவியும் ஒரு ஆசிரியர். எனக்கு எனது அண்ணனுக்கும் சேர்த்து 11 ஏக்கர் நிலம் உள்ளது அதனை குத்தகைக்கு விட்டுள்ளோம். மேலும் நானும் எனது நண்பரும் சேர்ந்து செங்கல் சூலை நடத்தி வருகிறோம். மேற்படி நிலம் திருவள்ளூர் மாவட்டம் ஸ்ரீகாலிகாபுரத்தில் உள்ளது. அது பரம்பரை சொத்து. செங்கல் சூலை நடத்துவதற்கு ஏதாவது லைசன்ஸ் பெற்றிருக்றோமா என்றால் நாட்டு செங்கற்களை அறுப்பதால் உரிமம் ஏதும் பெறவில்லை. எனது நண்பர் பெயர் தினகரன். அவர் காட்பாடி கோரந்தாங்கல் பகுதியை சேர்ந்தவர். அதே பகுதியில் தான் நாங்கள் செங்கல் சூலை நடத்தி வருகிறோம். செங்கல் சூலை மூலமாக 3 மாதத்திற்கு ஒரு முறை வருமானம் வரும். மேற்படி நிலத்தின் மூலம் ஆண்டிற்கு ஒரு முறை வருமானம் வரும். இரண்டையும் சேர்த்து ஆண்டுக்கு ரூ.4லிருந்து ரூ.5 லட்சம் வருமானம் வரும். செங்கல் சூலையை 5, 6 ஆண்டுகளாக தான் நடத்தி வருகிறோம். சூலையை குத்தகைக்கு விட்டு 10 ஆண்டுக்கு மேலாகிறது. நான் வருமான வரி செலுத்தவில்லை. ஆண்டுக்கு இவ்வளவு வருமான வரித் தொகை செலுத்த வேண்டும் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியும். நான் B.Sc., B.Ed., படித்துள்ளேன். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிக்கு நான் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பைப அனுப்பியிருந்தேன் என்று சொன்னால் அனுப்பியிருந்தேன். அதன் பிறகு தான் இந்த வழக்கை எனது வழக்கறிஞர் தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய மேற்படி வருமானங்களை பற்றி என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் கூறவில்லை என்று சொன்னால் 2019 ம் ஆண்டு நான் செங்கல் சூலை நடத்தவில்லை விவசாயம் மட்டும் தான் செய்து வந்தேன். நான் என்னுடைய வருமானங்களை பற்றி என்னுடைய வழக்கறஞர் அறிவிப்பிலும் பிராதிலும் தெரிவிக்கவில்லை என்றும் வழக்கிற்காக வேண்டி தற்போது தான் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 05.09.2017 அன்று பிரதிவாதி என்னிடம் தலா ரூ.5 லட்சம் இரண்டு முறை வாங்கியதாக இரண்டு புரோ நோட்டுகள் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதே தேதியில் பிரதிவாதி எனது மனைவியிடம் ரூ6 லட்சத்தையும் ரூ.4 லட்சத்தையும் பெற்றுக் கொண்டு இரண்டு புரோ நோட்டுகள் எழுதிக் கொடுத்ததாக அசல் வழக்கு 129/2025 தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 25 ஆண்டுகள் ஆகிறது. எங்கள் இருவருக்கும் பூர்வீகம் சோளிங்கர் என்று சொன்னால் நான் பிறந்தது ஸ்ரீகாலிகாபுரம் வளர்ந்தது எனது பாட்டனார் வீடான சோளிங்கரில் வசித்து வருகிறேன். திருமணத்துக்கு பிறகு நானும் எனது மனைவியும் இராணிப்பேட்டைக்கு குடிபெயர்நது விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. சோளிங்கரில் தான் வசித்து

வருகிறோம். எனது மனைவி DAV BHEL, பள்ளியில் வேலை செய்து வருகிறார். எனக்கு 2 பெண் குழந்தைகள். இருவரும் MBBS படித்து வருகிறார்கள். எனது மகள்களின் ஆதார் அட்டை விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். அவைகளில் சோளிங்கர் முகவரி தான் உள்ளது. எனது மகள்கள் இருவரும் மேற்படி பள்ளியில் தான் 11 மற்றும் 12ம் வகுப்பு பயின்றார்கள். எனது மகள்கள் மற்றும் மனைவியுடைய அனைத்து ஆதாரங்களிலும் சோளிங்கர் முகவரி தான் உள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் இராணிப்பேட்டைக்கு குடிபெயர்ந்து விட்டோம் என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்றேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் எனது மனைவிக்கும் சேர்ந்து பிரதிவாதி பொறுப்பேற்றுக் கொண்டு ஒரு காசோலை வழங்கியதாக கூறி நான் சோளிங்கர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். தாவா புரோ நோட்டுகளின் அடிப்படையில் கொடுக்கபபட்ட ரூ.20 லட்சத்தில் ரூ.10 லட்சம் எனது பணம் ரூ.10 லட்சம் எனது மனைவியின் பணம். எனது மனைவி கடந்த 22 ஆண்டுகளாக ஆசிரியையாக தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். அவர் வருமான வரி செலுத்தி வருகிறார். 2010–ல் இருந்து வருமான வரி செலுத்தி வருகிறார். அந்த விவரத்தை சோளிங்கரில் தாக்கல் செய்த வழக்கில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 05.09.2017 அன்று பிரதிவாதி பணம் பெற்று கொண்டு சென்றதாக கூறியுள்ளேன். அன்றைய தேதியில் தான் பணம் கேட்டாரா என்றால் இல்லை. அன்றைய தேதிக்கு 1 மாதத்துக்கு முன்பே என்னிடம் பணம் கேட்டார். அப்போது என்னிடம் ரூ.20 லட்சம் இருந்தது. நிலம் வாங்குவதற்காக வைத்திருந்தேன். 2017 க்கு முன்பு தான் 2016ல் இந்திய அரசாங்கம் பணம் Demonetization கொண்டு வந்த விவரம் பற்றி எனக்கு தெரியும். ரூ.20 ஆயிரத்துக்கு பணம் பரிவர்தனை ரொக்கமாக செய்ய கூடாது என்பது பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா தொகைகள் நானும் எனது மனைவியும் சேர்ந்து 5, 6 ஆண்டுகளாக சேமித்து வைத்த பணம் என்று சொன்னால் சரிதான். சீட்டு போட்டு சேர்த்து வைத்து பணம். இந்திய அரசாங்கம் ரொக்கமாக வைத்திருந்த பணத்தை வங்கியில் போடுமாறு கூறியும் நான் போடவில்லை என்று சொன்னால் நான் 500 ரூபாய் தாள்களாக வைத்திருந்ததால் அவைகளை நான் போடவில்லை. நான் ரூ.20 லட்சத்தை சட்டத்துக்கு புரம்பாக சம்பாதித்து என்று சொன்னால் சரியல்ல. 05.09.2017 அன்று என் வசமும் எனது மனைவி வசமும் ரூ.20 லட்சம் இருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி மேற்படி தொகையை வாங்கும் மாலை சுமார் 4 முதல் 5 மணி இருக்கும். எனது மனவைி காலை 7.30 மணிக்கு வேலைக்கு சென்றால் மாலை 4.45 மணிக்கு வீட்டுக்கு வருவார். எனது மனைவிக்கு மாலை 3.50 மணிக்கு பணி நேரம் முடியும். நான் கூறியதன் பேரில் தான் பிரதிவாதி மாலை என் வீட்டுக்கு வந்தார். அப்போது நான் எனது மனைவி மட்டும் தான் இருந்தோம் என்று சொன்னால் இல்லை. சாட்சி கையொப்பம் போட்ட எனது அண்ணன் சீனிவாசன் எனது மாமியார் அரங்கநாயகி மற்றும் புரோ நோட் எழுதிய சாந்தி ஆகியோர் இருந்தனர். என் அண்ணன் 2017 ஆண்டில் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். அவர் கேஜிகண்டிகையில் குடியிருந்து வருகிறார். மேற்படி சாந்தி இராணிப்பேட்டையில் வசித்து வருகிறார். மேற்படி நபர்கள் அனைவரும் நான் பணம் கொடுக்கும் விவரம் தெரிந்து தான் என் வீட்டுக்கு வந்தார்கள் என்று சொன்னால் எனது அண்ணனுக்கும் என் மாமியாருக்கும் பணம் கொடுக்கும் விவரம் பற்றி தெரியும். ஆனால் சாந்தி அவரது தம்பி வீட்டுக்காக வந்த போது அவர் எனது மனைவியுடன் எதர்சையாக எனது வீட்டுக்கு வந்தார். நான் கூறிய நேரத்தில் கூறிய தினத்தன்று பிரதிவாதி தாவா பிராமிசரி நோட்டுகளை எனக்கு எழுதி கொடுக்கவும் இல்லை பணமும்

என்னிடமிருந்து பெறவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியுடைய வெற்று காசோலைகளையும் வெற்று புரோ நோட்டுகளை தவறுதலாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.17 17:40:23 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.